


திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவில் 2000 பயனாளிகளுக்கு நலஉதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், திலகம் ராஜாமணி உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா!

# நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பி கலைஞர்!

## 2000 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி - அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜூலை 30 -

நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பி என்று திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் விழாவில், 2000 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பேசும் போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு இவ்வாறு குறிப்பிட்டார்.

28.07.2025 திங்கட் கிழமை மாலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை, இராஜராஜன் தெருவில் திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் தலைமை வகித்தார்.

ஒன்றியச் செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதிச் செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகர பகுதிச் செயலாளர் அ.கோவிந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, 2000 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். அவர் ஆற்றிய உரையிலிருந்து...

சென்னை முதல் கன்னியாக்குமரி வரை தனித்துவமான அடையாளங்களை உருவாக்கிய தமிழ்நாட்டின் நவீன சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர்தான். ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் அவருடைய அடையாளங்கள் உண்டு. திருவண்ணாமலை மாவட்டத்தை உருவாக்கியவர் கலைஞர்.

இங்குள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் போன்றவை எல்லாம் டாக்டர் கலைஞரால் இந்த திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வந்தது. 80 ஆண்டு கால பொது வாழ்வுக்கு சொந்தக்காரர்.

ஏறத்தாழ 97 ஆண்டு காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்த அண்ணன் கலைஞர் 80 ஆண்டு காலம் பொது வாழ்வில் 70 ஆண்டு காலம், அவர் சிறந்த எழுத்தாளர், நாடக நடிகர், அவரைப்போல் சொற்பொழிவு ஆற்றுவதற்கு யாருமில்லை, குற்றாலம் நீர் வீழ்ச்சி எப்படி கொட்டு கிறதோ அதைப்போன்ற சிறப்பான பேச்சாளர், திரைப்பட வசனக் கர்த்தா, கவிஞர் என பன்முகம் கொண்டவர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர், இதைவிட சிறப்பு என்னவென்றால் 13 முறை தேர்தலில் நின்று, 13 முறையும் வென்ற மகத்தானத் தலைவர். தலைவர் கலைஞர் காலத்தில்தான் பேருந்துகள் நாட்டுடமையாக்கப்பட்டது, செய்யாறு சிப்காட்டை உருவாக்கியதும் தலைவர் கலைஞர்தான், வசதி படைத்தவர்கள் மட்டுமே அனுபவித்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை குடிசைக்கும் கொண்டுவந்தவர். கண்ணீர் பெருக விறகு அடுப்பில் தொல்லைகள் அனுபவத்த தாய்மார்களுக்கு கேஸ் அடுப்பு தந்த தாயுள்ளம் கொண்டவர்தான் கலைஞர். 108 ஆம்புலன்ஸ் தந்து தமிழர்களின் இன்னுயிரை காத்து வரும் அற்புத தலைவர் கலைஞர் என்றால் மிகையாகாது. அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் முதல்வர் அண்ணன் மு.க.ஸ்டாலின், ஒவ்வொரு வீட்டிற்கும் என்னென்னத் தேவை என்று பார்த்துப் பார்த்து திட்டங்களை செய்து வருகிறார். ஒவ்வொரு குடும்ப பொருளாதாரமும் உயர வேண்டும் என்பதற்காக திட்டங்களை வகுத்திருக்கிறார். இன்றைக்கு பட்டினி சாவு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாவட்டம் வளர்வதற்கு காரணம் கலைஞரும், முதல்வர் ஸ்டாலின் அவர்களும் தான். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா. ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன். முத்து, சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரிய ப.விஜயரங்கன், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தரராசன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு. ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ. ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம் காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி. பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ். டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், கி.ஆறுமுகம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கு.பாலசுப்பிரமணி, மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.ராஜசேகர், எம். ஆர்.கலைமணி, சு.சமயராஜ், லக்கி.அரவிந்த், ஆர்.வெங்கடேஷ், அய்யம்பாளையம் திருநாவுக்கரவு, ஆ.தே.முருகையன், செல்வி, பச்சையம்மாள் யேசு, சுணாபேகம், கஸ்தூரி, மாநகர அமைப்பாளர்கள் மண்டி ஆ.பிரகாஷ், ஆ.மோகன்ராஜ், குணா (எ) குணாளன், துணை அமைப்பாளர்கள் சச்சின் சபரி, சூர்ய பிரகாஷ், சாம்.ரகுநாத், எம். எஸ்.டி.மணி, யாதேஷ் உட்பட கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்டச் செயலாளர் இரா.ராஜாமணி நன்றி கூறினார். முன்னதாக மாவட்ட தி.மு.க. இசைக்குழு அம்பேத் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

# விசுவாசம் + விடாமுயற்சி + ஓயாத உழைப்பு = முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்!



தன்னை வளர்க்க ததிங்கினத்தோம் போடும் தலைவர்கள் மலிந்த தமிழ்நாட்டு மண்ணில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக அயராது உழைத்து பல பதவிகளில் நேர்மையாகப் பணியாற்றி படிப்படியாக முன்னேறி, முதல்வர் ஆன பின்பும் சளைக்காது உழைத்து வீராப்பு பேசாமல் கட்சியை கண்போல் காத்து தொண்டர்களை தோளோடு அணைத்து, மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் தேவைகளை தெரிந்து, முடிந்தவரை அவற்றை நிறைவேற்றி, செய்ததை எல்லாம் மார்தட்டி தற்பெருமை பேசாமல் பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் கழகத்தையும், தமிழ் மாநில அரசையும் அப்பழுக்கற்ற வழியில் நடத்திச் செல்லும் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்.

**அதுவல்ல என் எழுத்தின் நோக்கம். தன்னை வருத்தி மக்களுக்காக உழைத்த அந்த சாமானியர் மனதில் இப்போது என்னென்ன எண்ணங்கள் ஓடும்? தன் உடல்நிலை பற்றி கவலை கொள்வார் என எவனாவது நினைத்தால் அவன் வடிகட்டிய முட்டாள் என்றே நான் சொல்வேன்! "மிசா" கைதியாக ஜெயிலில் இருந்தபோதே சாவை சந்தித்து திரும்பிய கையோடு அரசியலுக்கு "GOOD Bye" சொல்லியிருக்க வேண்டும் சொன்னாரா? பன்னிரெண்டு வருடங்கள் கலைஞர் ஆட்சியில் இல்லாத காலத்திலேயே அரசியல் வேண்டாமென ஓடியிருக்க வேண்டும்... ஓடினாரா? இவருக்கு இருந்த தன்னம்பிக்கையை ஒரு நிமிடம் நினைத்து பாருங்கள். தலைவராகும் வாய்ப்பு இவருக்கு வந்தது.**



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்,
தயாரிப்பாளர்,
எழுத்தாளர்

அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், பேராசிரியர் ஆகிய நூற்றுக்கணக்கான பெரியவர்கள் உருவாக்கி, வெற்றி உலா வந்த கட்சி அதன் தலைவர் பதவி, சாதாரண பொறுப்பா அது? அவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து எதிர் கொண்ட எல்லாத் தேர்தல்களிலும் மாபெரும் வரலாற்று வெற்றிகளை குவித்துக்காட்டினார்.

அகில இந்திய அரசியலில் ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளர் என பகிரங்க அறிவிப்பினை முதலில் சொன்னவர் நம் முதல்வர் ஸ்டாலின் அவர்களே! ஒன்றியத்தில் இதுவரை எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் **சனாதன சன்மார்க்க அரசியலே** நடக்கும். இதற்கு மாற்றாக இந்தியாவுக்கு **"திராவிட மாடல் அரசியலே"** தேவை என பிரகடனப்படுத்தி, மற்ற மாநிலங்களின் கவனத்தை ஈர்த்தவர் நமது முதல்வர். இந்த திராவிட மாடல் அரசியல், இந்திய ஒன்றியத்தில் நடைமுறைக்கு வந்தால் இந்திய நாடு உண்மையிலேயே SOCIALISTIC REPUBLIC என்று ஆவது உறுதி. இதனை பிரகடனப்படுத்தியே நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்திய நாட்டின் வரலாற்று நாயகன் என்று நிச்சயம் போற்றப்படுவார்.

**இதெல்லாம் நடைமுறைக்கு வரவேண்டுமென்றால் தகுதி வாய்ந்த நமது முதல்வரையும் கழகத்தையும் 2026 தேர்தலில் இருநூறுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். இதுவே பிற மாநிலங்களுக்கு உந்துதலை தரும். இந்திய ஜனநாயகம் காப்பாற்றப்படும். இது கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கோ, ஆன்மிக வாதிகளுக்கோ எவ்வித தீமையையும் ஏற்படுத்தாது!**

ஆன்மிகத்தை அரசியலுக்குள்ளும்... அரசியலுக்குள் ஆன்மிகத்தையும் நுழைத்து தப்பாட்டம் ஆடும் இன்றைய போலிகளின் முகத்திரைகள் கிழிக்கப்படும். இந்திய பூர்வீக குடிமக்களும், ஆதி திராவிடர்களும் பழங்குடியினரும் சமநீதி பெறுவர்! சாதி ஒழியும், ஏழ்மை விலகும் சுதந்திரம் அடித்தட்டு மக்களுக்கும் போய்ச் சேரும்.

**மாநில சுதந்திரம் மலரும், மத்தியில் கூட்டாட்சிக்கு வழி பிறக்கும்.**

### ஆன்லைன் சேவைகள் மூலம்

# வங்கிகள் வாடிக்கையாளர்களிடம் பெறும் கட்டணம் முறைபடுத்தப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு ஆன்லைன் சேவைகளுக்கு வங்கிகள் வசூலித்த கட்டணம் குறித்தும் அந்நிய செலாவணி சந்தை தலையீடுகள் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

பொதுத்துறை வங்கிகளும் அட்டவணை வங்கிகளும் நாடு முழுவதும் ஆன்லைன் சேவைகள் மற்றும் வங்கி நெட்வொர்க்குகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகளுக்கு பணம் வசூலிக்கின்றனவா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்து



ஆண்டுகளில் வங்கிகள் தங்கள் ஆன்லைன் சேவைகள் மூலம் ஈட்டிய மொத்தத் தொகை எவ்வளவு?

நாடு முழுவதும் ஆன்லைன் சேவைகள் மற்றும் வங்கி நெட்வொர்க்குகள் மூலம் வங்கிகள் ஈட்டிய வருமானத்தில் அபரிமிதமான உயர்வு என்பது உண்மையா அப்படியானால் அதன் விவரங்கள்; மற்றும் அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பை நிலைப்படுத்த ஒன்றிய அரசு அதன் அந்நிய செலாவணி மற்றும் தங்க இருப்புகளைப் பயன்படுத்தியுள்ளதா? என்று கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை ராஜாங்க அமைச்சர் பங்கஜ் சௌத்ரி எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

வங்கிகள் வாடிக்கையாளர் சேவை' குறித்த இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) முதன்மை சுற்றறிக்கையின் படி அந்தந்த வங்கிகளின் வாரியம் அவர்கள் வழங்கும் பல்வேறு சேவைகளுக்கு சேவைக் கட்டணங்களை பரிந்துரைக்க அதிகாரம் பெற்றுள்ளது இந்தக் கட்டணங்கள் நியாயமானதாகவும் இந்தச் சேவைகளை வழங்குவதற்கான சராசரி செலவிற்கு அப்பாற்பட்டதாகவும் இல்லாத நிலையில். மேலும் வாடிக்கையாளர்கள் அத்தகைய தகவல்களைப் பெற உதவும் வகையில் சேவைக் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை அந்தந்த வலைத்தளங்கள் மற்றும் அறிவிப்புப் பலகைகளில் காண்பிக்க வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரசு பொதுத்துறை வங்கிகள் (PSBகள்) தங்கள் ஆன்லைன் சேவைகள் (டெபிட் கார்டுகள் மற்றும் இணையம் / மொபைல் வங்கி மூலம் வணிகர் பரிவர்த்தனைகள்) மூலம் சம்பாதித்த மொத்தத் தொகை வணிக பரிவர்த்தனைகள் அந்நிய செலாவணி பரிவர்த்தனைகள் கட்டணம் செலுத்துதல் கட்டண சேவைகள்-IMPS/NEFT/RTGS)

கடந்த ஐந்து ஆண்டுகளில் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

2020-21ல் - ரூ.365.03 கோடி

2021-22ல் - ரூ.466.57 கோடி

2022-23ல் - ரூ.485.28 கோடி

2023-24ல் - ரூ.512.00 கோடி

2024-25ல் - ரூ.510.05 கோடி

மேலும் நாடு முழுவதும் ஆன்லைன் முறை மற்றும் வங்கி நெட்வொர்க்குகள் உட்பட வழங்கப்படும் அனைத்து சேவைகள் மூலம் பொதுத்துறை வங்கிகள் ஈட்டிய வட்டி அல்லாத வருமானம் கடந்த 5 ஆண்டுகளில் (நிதியாண்டு 2019-20 முதல் நிதியாண்டு 2024-25 வரை) 9.15% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன் (CAGR) அதிகரித்துள்ளது.

ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி இந்திய ரூபாயின் (INR) மதிப்பு சந்தையால் தீர்மானிக்கப்படுகிறது இலக்கு அல்லது குறிப்பிட்ட நிலை என்பதால் அல்ல. ரிசர்வ் வங்கி அந்நியச் செலாவணி சந்தையை தொடர்ந்து கண்காணித்து அதிகப்படியான ஏற்ற இறக்கங்கள் ஏற்படும் சூழ்நிலைகளில் தலையிடுகிறது. செப்டம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அந்நிய செலாவணி சந்தை தலையீடுகள் அமெரிக்க டாலர் மற்றும் இந்திய ரூபாயின் அடிப்படையில் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை வட்டாரம், சின்னகல்லு பள்ளி ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமில் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.சிவ சவுந்தரவள்ளி, ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளர் க.உமாகன்ரங்கம், ஜோலார்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் சத்யாசதீஷ்குமார் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி மத்திய ஒன்றியம் ஊணை கிராமத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" நிகழ்ச்சியில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சிக் குழு பெருந்தலைவர் மு.பாபு ,மத்திய ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் சி.பாஸ்கரன், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணமேனன் மற்றும் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.